# ரொஷிபா

குளிர்சாதனப் பெட்டிகள்,
மின் விசிறிகள்.
சர்வதேச தரத்திலானது
உங்கள் இல்லங்களுக்கு
அவசியம் தேவை.
சிறிதளவே கையிருப்பில் உண்டு.
இ.சின்னத்துரை அன் பிரதர்
யாழ்ப்பாணம் போன் 284.



★ பக்கங்கள் 6 விலை சதம் 40

# ஈழநாடு

The EELA NADU

மலர்:20 ஐப்பசி 2 ஜுல்ஹஜ் 16 இதழ்: 250
யாழ்ப்பாணம் வியாழக்கிழமை 19-10-78



காலத்திற்கு ஏற்ற
இறக்குமதி செய்யப்பட்ட
பல பொருட்கள்
தாராளமாகக் கிடைக்கும்
● மணிக்கூடுகள்
● ... யோக்கள்
● 3 ... மிக்சர்
● ... கிறைண்டர்
● எலெக்ரோனிக்
கருவிகள்
சி.சின்னத்துரை அன் பிரதர்
யாழ்ப்பாணம் - போன்: 284



RECEIVED ... PERIODICALS DIVISION LIBRARY


### அமெரிக்க சிறுபான்மை மக்களுக்குள்ள பாதுகாப்புபற்றி

# காங்கிரஸ் சபையினருடன்

# 'அமிர்' விரிவான ஆலோசனை

## பெண்களின் நிலைமைபற்றி மங்கையர்க்கரசி ஆர்வம்

(கொழும்பு)

**அமெரிக்க அரசாங்கம் அங்குள்ள சிறுபான்மை இனத்தவர்களின் பாதுகாப்புக்கு எவ்வாறு உத்தரவாதம் அளித்துள்ளது என்பதுபற்றி இலங்கை எதிர்க்கட்சித் தலைவரும் தமிழர் விடுதலைக் கூட்டணிச் செயல் அதிபருமான திரு. அ. அமிர்தலிங்கம் விரிவாக ஆராய்ந்துள்ளார்.**

அமெரிக்காவில் அந்நாட்டு காங்கிரஸ் சபையின் உறுப்பினர்களைச் சந்தித்தபொழுது அவர்களுடன் திரு. அமிர்தலிங்கம் இது விஷயமாக விரிவாக ஆலோசனை நடத்தினார்.

அமெரிக்க வெளிவிவகார அமைச்சின் இலங்கை விஷயங்களுக்குப் பொறுப்பான அதிகாரிகளோடும். மனித உரிமைகளுக்குப் பொறுப்பான அதிகாரிகளோடும் திரு. அமிர்தலிங்கம் பேச்சுவார்த்தைகள் நடத்தியுள்ளார்.

திரு. அமிர்தலிங்கத்தின் வெளிநாட்டு பிரயாணம் தொடர்பாக அவரது செயலாளர் திரு. இ. பேரின்பநாயகம் நேற்று கொழும்பில் விடுத்த ஒரு அறிக்கையில் இந்த விபரம் தரப்பட்டுள்ளது.

திரு. அமிர்தலிங்கமும் திருமதி மங்கையர்க்கரசி அமிர்தலிங்கமும் இம்மாதம் 1ம் திகதி அமெரிக்காவுக்குப் போய்ச் சேர்ந்தார்கள் அவர்களை அமெரிக்க வெளியுறவு அமைச்சக உயர் அதிகாரிகள் வரவேற்று உபசரித்தனர்.

அமெரிக்க அரசாங்க அதிகாரிகள், உலக கிறிஸ்தவ மன்றம், நிறத்வர்களின் முன்னேற்றத்துக்கான தேசிய இயக்கம், மனித உரிமை இயக்கம், உள்ளூராட்சி அதிகார சபை போன்றவற்றின் பிரதிநிதிகளையெல்லாம் சந்தித்து திரு. அமிர்தலிங்கம் பேச்சுக்கள் நடத்தினர்.

### திருமதி அமிர்தலிங்கம்

திருமதி மங்கையர்க்கரசி அமிர்தலிங்கம் அமெரிக்காவிலுள்ள பல்வேறு பெண்கள் நிறுவனங்களுக்கும் விஜயம் செய்து அங்கே பெண்கள் அரசியல், சமூகப் பிரச்சினைகளை எவ்வாறு சமாளிக்கிறார்கள் என்பது பற்றியும், இத்துறைகளில் அவர்கள் அடைந்துள்ள வளர்ச்சிபற்றியும் அறிந்து கொண்டார்.

அமெரிக்க தேசிய பெண்கள் அரசியல் நிறுவனம், பெண்கள் வாக்காளர் மன்றம் சர்வதேச அபிவிருத்தி வங்கி, பெண்களுக்கான கல்விநிதி நிறுவனம போன்றவற்றிற்கு திருமதி மங்கையர்க்கரசி அமிர்தலிங்கம் விஜயம்செய்தார்.

(6ம் பக்கம் பார்க்க)

## பீலிக்ஸ் நடத்திய முட்டை வியாபாரம்

[கொழும்பு]

அமைச்சராக இருந்து கொண்டே, அரசாங்கச் சந்தைப்படுத்தும் திணைக்களத்திற்கு முட்டை விற்பனைசெய்ததின் மூலம் 1971ம் ஆண்டு அக்டோபர் மாதம் முதல் 1977ம் ஆண்டு மார்ச் மாதம் வரை 31 லட்சத்து 60 ஆயிரம் ரூபாய் சம்பாதித்தாராம் முன்னாள் நீதி நிர்வாக, உள்நாட்டமைச்சரான திரு. பீலிக்ஸ் டயஸ் பண்டாரநாயக்கா.

ஜனாதிபதி விசேஷ ஆணைக்குழு முன் இந்த விபரம் நேற்றுத் தெரிவிக்கப்பட்டது.

நைவல கோழிப்பண்ணை, தமக்கும், தமது மனைவிக்கும் சொந்தமானதென முன்பு ஒப்புக்கொண்டுள்ளாரென்றும், பாராளுமன்ற உறுப்பினராக இருந்துகொண்டே, அரசுடன் வர்த்தக ஒப்பந்தமொன்று செய்துகொண்டால் பதவியை இழக்க நேரிடுமென்பதால்

[6-ம் பக்கம் பார்க்க]

### தடைசெய்யப்பட்ட இயக்கத்தினரின்

## கடித புகைப்படப் பிரதி கமிஷன்முன் தாக்கல்!

(திருகோணமலை)

'அவ்ரோ' விமானம் குண்டு வைத்துத் தகர்க்கப்பட்டது தொடர்பாகத் தடைசெய்யப்பட்ட ஒரு இயக்கம், வெளிநாட்டுத் தூதரகத்துக்கு அனுப்பிய கடிதமொன்றின் புகைப்படப் பிரதியொன்றினை, அரச சட்டத்தரணி திரு. தென்னக்கோன், நேற்று சன்சோனிக் கமிஷனிடம் கையளித்தார்.

தடைசெய்யப்பட்ட பிரஸ்தாப இயக்கத்தினரால் பிரிட்டிஷ் தூதரகத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டதாகக் கருதப்படும் கடிதத்தின் பிரதியே, நேற்றுக் கமிஷனிடம் கையளிக்கப்பட்டது.

இக்கடிதத்தின் உண்மைப் பிரதியை, ஆணைக்குழு மீண்டும் கொழும்பில் கூடும்போது சமர்ப்பிப்பதாகச் சட்டத்தரணி தெரிவித்தார்.

மேற்படி இயக்கத்தினரால் எழுதப்பட்டதாகக் கூறப்படும் கடிதம் தொடர்பான செய்தியை வெளியிட்டிருந்த 'லண்டன் டைம்ஸ்' பத்திரிகையின் பத்திரிகையின் பிரதியொன்றைச் சிங்கள இளைஞர் இயக்கத்தின் சார்பில் ஆஜரான சட்டத்தரணி ஹரிச்சந்திர விஜயதுங்க, ஆணைக்குழுவிடம் சமர்ப்பித்தார்.

நேற்று, விக்கிரமநாயக்க சிறிசேன என்பவர், கமிஷன் முன் சாட்சியமளிக்கையில், திருகோணமலைப் பகுதியில் சிங்கள் மக்கள் சுதந்திரமாக வாழமுடியாமல் இருக்கிறது என்றார்.

அகதிகள் புனர்வாழ்வுக் கழகத்தின் சார்பில் ஆஜரான சட்டத்தரணி திரு சிவராஜரத்தினம் குறுக்குவிசாரணை செய்தபோது, தமிழரின் தோளில் ரபான் அடித்து,

[6ம் பக்கம் பார்க்க]

### சட்டவிரோதமாக

## வீட்டில் கள்ளு விற்ற பெண்ணுக்கு 6 மாத சிறை!

(யாழ்ப்பாணம்)

சட்டவிரோதமாக வீட்டில் கள்ளு விற்றதாக 48 வயதான விதவைக்கு எதிராக தொடரப்பட்ட வழக்கில் 6 மாத கடுழிய சிறைத்தண்டனை விதிக்கப்பட்டது.

இவ்வழக்கு யாழ்ப்பாணம் நீதவான் திரு.ஜீ.டபிள்யு. வீரத்ன முன்னிலையில் விசாரணை செய்யப்பட்டது.

இவ்வழக்கில் ஆனைக்கோட்டையைச் சேர்ந்த வேலன் கைம்பெண் கண்ணகை என்ற பெண் சட்ட விரோதமாக வீட்டில் கள்ளு விற்றதாக குற்றம் சாட்டப்பட்டிருந்தது.

எதிரி குற்றத்தை ஒப்புக்கொண்டு தனக்கு 6 குழந்தைகள் உண்டென்றும் சீவிக்கவழியில்லையென்றும்தெரிவித்தார்.

நீதவான் இப்பெண்ணின் நிலைபற்றி விசாரணை செய்து அறிக்கை சமர்ப்பிக்குமாறு நன்னடத்தை அதிகாரிக்குத் தெரிவித்தார்.

நன்னடத்தை அதிகாரி அப்பெண்ணுக்கு பிள்ளைகள் இல்லை யென்றும் குடும்பநிலைமை நன்றாக இருப்பதாகவும் அறிக்கையில் தெரிவித்திருந்தார்

இதனைத் தொடர்ந்து நீதவான் அப்பெண்ணுக்கு 6 மாத கடுழியச் சிறைத் தண்டனை விதித்தார். இப்பெண்சார்பில் சட்டத்தரணி எவரும் ஆஜராகவில்லை. (க)

### சுவீப் முதல் மூன்று பரிசுகள்

(கொழும்பு)

நேற்று இழுக்கப்பட்ட 685 வது தேசிய சுவீப்பின் முதல்மூன்று முடிவுகளும் பின்வருமாறு:

1ம் பரிசு
**17 H 0594**
ரூ. 1,000,00

2ம் பரிசு
**24 B 0668**
ரூ. 40,000

3ம் பரிசு
**09 J 0069**
ரூ. 10,000

தலா ரூபா 1717 சதம் 50 பெறும் 100 முடிவுகள் நாளை வெளிவரும்.

### 'சுந்தர்' தலைமையில் 'ருகிங்' விசாரணை

[கொழும்பு]

இலங்கைப் பல்கலைக்கழக பேராதனை வளாகத்தில் அண்மையில் இடம்பெற்றதாகக் கூறப்படும் 'ருகிங்' துன்புறுத்தல் தொடர்பாக விசாரணை செய்வதற்காக உயர்பொலிஸ் அதிகாரிகள் குழு ஒன்று நியமிக்கப்பட்டுள்ளது.

பிரதிப் பொலிஸ்மா அதிபர் திரு. ஆர். சுந்தரலிங்கம் தலைமையிலான குழுவே 'ருகிங்' சம்பந்தப்பட்ட விசாரணைகளை மேற்கொள்ளும்.

இதுதொடர்பாக திரு. சுந்தரலிங்கம் உயர்கல்வி அமைச்சின் செயலாளர் டாக்டர் கஸ்பகே, உபவேந்தர் பேராசிரியர் பி. பி. ஜீ. எல். சிறிவர்த்தன உட்பட பல உயர்அதிகாரிகளைச் சந்தித்தார். (இ)

## வரி விளம்பரம்

### WANTED

Teachers for Chemistry, Physics, Botany, Zoology in A. L. Classes. Apply immediately. Rector, St. Patrick's College, Jaffna. 0598


## சுயம்புலிங்கம் பிரதிஷ்டை

(யாழ்ப்பாணம்)

சுவாமி சிவபாலயோகி மகராஜ் தமது பன்னிரண்டு ஆண்டு தவம பூர்த்தியின் பின்னர் நர்மதா நதியில் கண்டெடுத்த சுயம்புலிங்கத்தை இந்தியாவிலிருந்து இலங்கை வரும்போது கொண்டுவந்துள்ளார்

இச்சுயம்புலிங்கத்தை நுவரெலியா ஸ்ரீலங்கா தீஸ்வர தியானமந்திரில் 108 தேங்காய் உடைத்து யோகி மகராஜ் பிரதிஷ்டை செய்தார்.

தெல்லிப்பளை யூனியன், மகாஜனவில்

# பாலர் வகுப்புக்குத் தடை: 300 பிள்ளைகள் பாதிப்பு

[யாழ்ப்பாணம்]

தெல்லிப்பளை யூனியன் கல்லூரி, மகாஜனக்கல்லூரி ஆகியவற்றில் பாலர்வகுப்பு நடத்த தடைவிதிக்கப்பட்டுள்ளது.

இதனால், இக் கல்லூரி சுற்றுடலிலிருக்கும் சுமார் 300 பாலகர்கள் பாதிப்படைந்துள்ளார்கள். இப் பாலகர்களின் பெற்றோர்கள் இத் தடையினல் பெரும் கலக்கமடைந்துள்ளனர்.

இக் கல்லூரிகளில் ஐந்து வயது முடிந்த தங்கள் பிள்ளைகளை சேர்ப்பதற்கு, தெல்லிப்பளையிலுள்ள பெற்றோர்கள் விண்ணப்பித்திருந்தனர்.

வட்டாரக்கல்வி அதிகாரி அலுவலகத்திலிருந்து, சகல பெற்றோர்களுக்கும் இக் கல்லூரிகளில பாலர்வகுப்பு வைடபதில்லையென கல்வித்திணைக்களம் தீர்மானித்துள்ளதாக அறிவிக்கப்பட்டது

இதனைத்தொடர்ந்து பெற்றோர்கள் கல்வித்திணைக்களத்துடன் தொடர்கொண்டும் எவ்வித பலனும் இடைக்கவில்லை.

இதேசமயம் தெல்லிப்பளை வட்டாரக் கல்வி அதிகாரி திரு. பொ. சிவஞானசுந்தரம் இம்மாத 9-ம் தேதி பெற்றோர்களுக்கு கடிதம் ஒன்று அனுப்பிவைத்துள்ளார் அக் கடிதத்தில் 79-ம் ஆண்டு யூனியன்கல்லூரி மகாஜனக் கல்லூரி ஆகியவற்றில் பாலர் வகுப்பை வைப்பதில்லை என கல்வித்திணைக்களம் தீர்மானித்திருப்பதால் உள்ள மகன் அல்லது மகளை மாவிட்டபுரம் வடக்கு அ.மி. பாடசாலையில் சேர்க்கலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இக்கடிதம் பெற்றோர்களுக்கு மேலும் அதிருப்தியை எற்படுத்தியதாக பெற்றோர் ஒருவர் தெரிவித்தார். தெல்லிப்பளையிலிருந்து 2 மைல்களுக்கு அப்பால் உள்ள மாவிட்டபுரத்திற்கு 6 வயதுப் பிள்ளையை கூட்டிச்சென்று பின் கூட்டிவருவதென்பது பெற்றோர்களால் முடியாத காரியமென்று அவர் தெரிவித்தார்.

இதனை மனிதாபிமானத்துடன் பரிசிலனை செய்ய வேண்டுமென்றும் கணவன் வேலைக்கு சென்றால் வீட்டிலிருக்கும் மனைவி சமையல் வேலையையும் விட்டு நாள் முழுதும் தன் 6 வயது பிள்ளையுடன் மாவிட்டபுரம் போய் வருவது முடிந்த காரியமா? என மற்றொரு தந்தை தெரிவித்தார். வீட்டில் 5 வயதிற்குட்பட்ட பிள்ளைகளை தனியே விட்டு விட்டு எப்படி 6 வயதுப் பிள்ளையை 2 மைல் கூட்டிச்செல்ல முடியும் என்று ஒருதாயார் தெரிவித்தார்.

பெற்றோர்கள், இதுபற்றி வடமாநிலக் கல்வி அதிபதி திரு. ரீ மாணிக்கவாசரிடம் ஆட்சேபம்தெரிவித்துள்ளனர். [க]

பருத்தித்துறை

## கடலரிப்பைத் தடுக்க நடவடிக்கை

[புலோலி]

பருத்தித்துறைக்கடற்கரைப் பகுதியில் பயங்கரமான முறையில் ஏற்பட்டுவரும் கடலரிப்பைத்தடை செய்ய பருத்தித்துறை எம்.பி. திரு. க. துரைரத்தினம் நடவடிக்கை எடுத்துள்ளார்.

இப்பகுதிமக்கள் கடலரிப்பைத் தடைசெய்வதற்கு உடன்நடவடிக்கை மேற்கொள்ளும்படி எம். பி யைக் கோரியதற்கிணங்க எம். பி யின் நடவடிக்கைகளால் அண்மையில் கடலரிப்புப்பற்றி ஆராய்வதற்குச் சில உத்தியோகத்தர்கள் இப்பகுதிக்கு வந்து நிலைமையை அவதானித்துச் சென்றுள்ளனர்.

வெகுவிரைவில் இதற்கான பாதுகாப்பு நடவடிக்கைகள் ஏற்படுத்தப்படுமென எம்.பி. தெரிவித்தார். [அ]

## திருமலைத் துறைமுகம் விரைவில் அபிவிருத்தி

### நேரில் பார்த்த லலித் தகவல்

(திருகோணமலை)

உலகின் இயற்கைத்துறைமுகங்களில் ஒன்றான திருகோணமலைத் துறைமுகம் விரைவில் அபிவிருத்தி செய்யப்படும். இத்துறைமுக அபிவிருத்தி மூலம் கொழும்புத் துறைமுகத்தில் ஏற்பட்டுவரும் இடநெருக்கடியைத் தவிர்க்க முடியும்.

இவ்வாறு வர்த்தக கப்பல் துறை அமைச்சர் திரு. லலித் அத்துலத்முதலி திருகோணமலையில் தெரிவித்தார்.

துறைமுக அபிவிருத்திகளில் திருமலைத் துறைமுக அபிருத்திக்கு முதலிடம் அளிக்கப்படும் என்றும் திரு. அத்துலத்முதலி நேற்றுமுன்தினம் திருகோணமலைத் துறைமுகத்தைப் பார்வையிட்ட பின்னர் தெரிவித்தார்.

சிங்கப்பூர் நிறுவனத்தினல் திருகோணமலையில் அமைக்கபட்டுவரும் மிகப்பெரும் மாஆலையின் கட்டிட வேலைகளையும் அமைச்சர் பார்வையிட்டார். (இ)

## நீதவான் பாராட்டு

(யாழ்ப்பாணம்)

வல்லிபுரஆழ்வார் கோயில் திருவிழாவின் போது தின்பண்டங்களைத்திறந்தபடி விற்பனைசெய்த வியாபாரிகளையும் அவர்களின் பொருட்களையும் பகுதி பொது சுகாதார பரிசோதகரும் பொலிசாரும் திடீர் சோதனையின் பின் பருத்தித்துறை நீதவான் திரு. கே.ஞானச்சந்திரன் முன்னிலையில் ஆஜர் செய்தனர்.

பொதுமக்களுக்கு விற்பனைக்காக வைக்கப்பட்டு கைப்பற்றப்பட்ட இப்பொருட்களை நீதவான் முன்னிலையில் வைத்திய அதிகாரி டாக்டர் மேலும்மயிலும் பரிசோதனை செய்தார்.

அவ்வுணவுப்பொருட்களில் இலையான், வண்டுகள் போன்ற தத்துவெட்டிகள் போன்றவை அமர்ந்திருந்த அடையாளங்கள் இருப்பதாவும் சிலபொருட்களில் மண் கல் போன்றவைகள் காணப்படுவதாகவும் டாக்டர் தெரிவித்தார்.

பொதுமக்களின் நலன் குறித்து இந்தப்பொருட்களைக் கைப்பற்றி நடவடிக்கை எடுத்த அதிகாரிகளுக்கு நீதவான் பாராட்டு தெரிவித்தார்.

## திருட்டு

[நாயன்மார்கட்டு]

நாயன்மார்கட்டு மகேஸ்வரி வித்தியாசாலைக்கு அண்மையில் உள்ள வீட்டில் 9 மூட்டைசாக்கு எள் களவு போய்விட்டது. இவை 5000 ரூபா பெறுமதிவாய்ந்தது என யாழ்ப்பாண பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

யாழ்ப்பாண வர்த்தகர் ஒருவர் மேற்படி இடத்திலுள்ள வீட்டில் 45 எள் மூடைகளை வைத்துச் சென்றதாகவும் அவற்றில் 9 மூட்டை களவு போய் விட்டது எனவும் கூறப்பட்டுள்ளது. இதுவரை யாரும் இது தொடர்பாக கைது செய்யப்படவில்லை. [உ]

## மாணவர் கைகலப்பு

(கோண்டாவில்)

யாழ்ப்பாணம் பல்கலைக்கழக மாணவர்கள் இவருக்கிடையில் கைகலப்பு ஏற்பட்டதாம்' சிரேஷ்ட மாணவர் ஒருவர் பதிவாளரின் அறைக்குச் செல்லும்பொழுது கனிஷ்ட மாணவன் ஒருவர் கூக்குரலிட்டதாகவும். இதனல் கோபம் கொண்ட சிரேஷ்ட மாணவன் கனிஷ்ட மாணவனை வெளியில் வைத்துத் தாக்கியதாகவும் கூறப்படுகிறது. இவ்வாறு தாக்கப்பட்ட புதிய மாணவன் வட்டுக்கோட்டையைச் சேர்ந்தவராம். (உ)

## மாணவர் பொழுதுபோக்கு முகாம்கள்

(கொழும்பு)

மாணவர்களுக்கான விடுமுறைக்கால பொழுது போக்கு முகாம்களை நிறுவ கல்வி அமைச்சு நடவடிக்கை மேற்கொண்டு வருகிறது.

தென்பகுதி மாணவர்கள் வடபகுதி முகாம்களிலும் வடபகுதி மாணவர்கள் தென்பகுதி முகாம்களிலும் விடுமுறைக்காலத்தில் தங்கியிருக்கும் பட்சத்தில் தமிழ்-சிங்கள மாணவரிடையே தேசிய ஒற்றுமையை ஏற்படுத்த முடியும் என்று கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.

மன்னார், திருகோணமலை, எட்டியாந்தோட்டை, அனுராதபுரம் ஆகிய இடங்களில் இந்த முகாம்கள் அமைக்கப்படவுள்ளன.

கிறிஸ்மஸ் விடுமுறைக் காலத்தில் இம்முகாம்களில் தங்கியிருக்கும் மாணவர்கள் கிராமிய அபிவிருத்தி பணிகளை சிரமதானப்பணிகள் மூலம் மேற்கொள்வர் என்றும் கல்வி அமைச்சு அறிவித்தது. (இ)


## கோட்டு விற்பனவு விளம்பரம்

மல்லாக மாவட்ட நிதிமன்றம்

இல. ஈடு/1164

1. கந்தப்பிள்ளை கைம்பெண் சின்னத்தங்கம் மாவிட்டபுரம், தெல்லிப்பளை

வழக்காளிகள்

எதிராக

1. சின்னத்தம்பி துரைராசாவும்
2. பெண் பரமேஸ்வரியும் இருவரும் மாவிட்டபுரம், தெல்லிப்பழை.

எதிராளிகள்

மல்லாகம் டிஸ்திறிக் கோட்டின் 1164-ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னல் விபரிக்கப்படும் காணியை 1978-ம் ஆண்டு ஐப்பசி மாதம் 26-ந் திகதி (26-10-78) வியாழக்கிழமை 10 மணியளவில் அந்தக்காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

### தீர்வைத்தொகை

முதல் வட்டி ரூபா 3785-30 7-4-76 தொடக்கம் 14-2-78 வரைக்கும் 3000/-வருடம் ஒன்றிக்கு நூற்றுக்கு 16% வட்டியும் அதன்பின் முழுத்தொகைக்கும் இறுக்கப்படும் வரைக்கும் 9% வட்டியும் வழக்குச்செலவு ரூபா 568-60.

### ஆதன இடாப்பு

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வலிகாமம் வடக்குப் பகுதி மயிலிட்டி கோவிற்பற்று முலவை இறை, "பெருச்சிகலட்டி" நிலப்பரப்பு நாற்பது (40) இதில்கிழக்குப்புறமாக நிலப்பரப்பு பதினைந்தும் (15) பனைகளும் வடலிகளும் இதற்கெல்லை கிழக்கு வயிரவப்பிள்ளை கதிரேசுவுக்கும் சகோதரர்களுக்குமுரிய ஆதனம், வடக்கு வேலு மகள் கதிராசிக்கும் மறுபேருக்குமுரிய ஆதனம், மேற்கு செல்வரத்தினம் பெண் சரஸ்வதியினுதனம், தெற்கு சின்னத்தம்பி செல்லத்துரைக்கும் பெண் தெய்வானைப்பிள்ளைக்குமுரிய ஆதனம் இதடங்கலும்.

மு. விஜயராசன்,
நீதிமன்ற விற்பனவு விலைமதிப்பாளையாளர்.

கொக்குவில் மேற்கு,
கொக்குவில்,
3-10-78. 0602


## கோப்பாயில் கருத்தரங்கு

[யாழ்ப்பாணம்]

தமிழ்க் காங்கிரஸ் கருத்தரங்கு நாளை மாலை கோப்பாய் சந்திக்கருகாமையில் நடைபெறவிருக்கிறது.

தமிழ்க் காங்கிரஸ் தலைவர் திரு. ரி. சங்கரப்பிள்ளை பொதுச் செயலாளர் திரு. ஜீ. ஜீ. பொன்னம்பலம், மற்றும், வாலிப முன்னணியினர் உரை நிகழ்த்துவார்கள். [க]

## படம் வரை தொழிற் பயிற்சி

(கோண்டாவில்)

யாழ்ப்பாணம் பல் தொழில் நுட்ப நிலையத்தில் படம் வரை தொழில் பயில்வோர் பயிற்சியில் 17 மாணவர்கள் சித்தி அடைந்துள்ளார்கள். 10 மாணவர்கள் நூன சித்தி பெற்றுள்ளார்கள்' இப் பரீட்சைக்கு மொத்தம் 34 மாணவர்கள் தோற்றினார்கள். இப்பயிற்சி நெறியை இவ்வருடம் சுமார் 9 பெண்களும் மேற்கொண்டுள்ளனர். இப்பயிற்சி நெறிக்கு அதிக மாணவர்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளது இவ்வருடமே யாகும்.

தரிசுநிலங்களை

## முந்திரிகைச் செய்கைக்கு பயன்படுத்தக் கோரிக்கை

[உடுப்பிட்டி]

வடமராட்சிப் பகுதியில் உள்ள தரிசு நிலங்களை முந்திரிகைச் செய்கைக்காகப்பகிர்ந்து அளிக்குமாறு காணி விவசாய அமைச்சரை விவசாயிகள் கோரியுள்ளனர்.

உடுப்பிட்டி, பருத்தித்துறை தொகுதிகளிலுள்ள அம்பன், கப்புது, குடத்தனை, மணற்காடு, அந்தணந்திடல், வல்லிபுரம் பகுதிகளில் பல ஏக்கர் மணல்தரை வெறும் தரிசுநிலங்களாகக் காணப்படுகின்றன.

இப்பகுதிகளில் முந்திரிகைச் செய்கை பெரிதும் பயன் அளிப்பதால் இப்பகுதி விவசாயிகள் முந்திரிகைச்செய்கையில் அதிக ஆர்வம் காட்டிவருகின்றார்கள். [அ]

## தியாகராஜ பாகவதர் நினைவு தினம்

(யாழ்ப்பாணம்)

கந்தர்வ கான ரத்தின எழிலிசைஅரசு எம்.கே. தியாகராஜபாகவதரின் 19-வது நினைவுதினம் நவம்பர் மாதம் 1-ந் திகதி வண்ணை நாச்சிமார் கோவிலடியில் கொண்டாடப்படுகிறது.

வண்ணை கந்ர்வகான சபா ஆதரவில் இவ்விழா நடைபெறுகிறது.

1958-ம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட இக்கான சபா 1959-ம் ஆண்டு அன்னார் மறைந்ததிலிருந்து ஆண்டு தோறும் அன்னாரின் நினைவு தினத்தைக் கொண்டாடி வருவது குறிப்பிடத்தக்கது. [இ]

## நோர்வே தேச குழுவினர்

(காரைநகர்)

காரைநகர் ஊரி நல்லொழுக்க வாலிபர் சங்கத்தினர் மேற்கொள்ளும் ஊரிக்கிராம அபிவிருத்திதிட்ட வேலைகளை பார்வையிடுவதற்காக நோர்வே தேசத்து மாதர் முன்னேற்றச் சங்க பிரதிநிதிகள் குழு இலங்கை வந்துள்ளனர்.

மேலும் இக்குழு காரைநகரில் தோப்புகாடு, மடத்துவளவிற்கும்வட்டுக்கோட்டை, அராலி, தட்டுவன்கொட்டி ஆகிய கிராமங்களுக்கும் செல்லவிருக்கின்றது. (க)

ஈழநாடு
The Eelanaadu

## பல்கலைக்கழக கல்வி

இலங்கைப் பல்கலைக் கழகக் கதவுகள் இலங்கையில் வசிப்பவர்கள் எவராக இருந்தாலும் பாரபட்சமின்றித் திறந்திருக்கும் என்று இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் தலைவரும் கிராமக் கைத்தொழில் அமைச்சருமான திரு. எஸ். தொண்டமான் தெரிவித்திருக்கிறார்.

பல்கலைக்கழக மசோதாவில் 30-வது விதியில் திருத்தம் கொண்டுவரப்பட்டதால் தான் இலங்கையில் வசிப்பவர் எவரும் பல்கலைக் கழகத்தில் சேர்ந்து. உயர் கல்வி பெறுவதற்கானவாய்ப்புக்கிடைத்திருக்கிறது,

சட்டரீதியாக இலங்கைகையில் வசிக்கும் இருபாலாரும் சாதி மத வேறுபாடின்றிப் பல்கலைக் கழகத்தில் கலவிபயிலலாம் என்று பல்கலைக்கழக மசோதாவின் முப்பதாவது விதியில் தெரிவிக்கப்பட்டிருந்தது. இதன்படி பாஸ்போர்ட், விசா வழங்கப்பட்டுள்ளவர்களே பல்கலைக்கழகக் கல்விபெற முடியும்.

ஆனால் பாஸ்போர்ட், விசா, மற்றும் சட்டரீதியான தஸ்தாவேஜுகள் எதுவுமில்லாத இந்திய வமசாவழிப் பிரஜைகள் பலர் இந்நாட்டில் வசிக்கின்றனர். அறிவும் ஆற்றலும் நிறைந்தவர்களிருப்பினும் பிரஜா உரிமைப் பிரச்னையால் உயர் கல்வி பெற முடியாதுள்ளவர் பலர் உளர். உயர் கல்வி பெற வாய்ப்பில்லாததால் மலையக மக்கள் அடிமைகளாகக் கணிக்கப்பட்டனர். இன்று நிலைமை மாறிவருகின்றது.

பல்கலைக் கழகக் கல்வி பெறுவதற்கு இருந்த தடையும் இப்போது திரு தொண்டமானின் முயற்சியால் நீங்கிவிட்டது.

மலையகத்துக்கு நல்லதொரு எதிர்காலம் இருக்கிறதென்பதற்கான அறிகுறிகள் தோன்றியுள்ளன. திரு.தொண்டமான் பார்லிமெண்டுக்குத் தெரிவு செய்யப்பட்டது மட்டுமல்ல, அமைச்சராகவும் அவர் நியமனம் பெற்றிருப்பதுகுறிப்பாக மலையக மக்களுக்கும் பொதுவாகத்தமிழ்மக்களுக்கும் நன்மைகள் பலகிடைக்குமென்று எதிர்பார்க்கலாம்.

அரசியல் பிரச்னைகளிலும் தேவையற்ற பிரச்னைகளிலும் திரு. தொண்டமான் தமது சக்தியை விரயக்கிக் கொள்ளாதது அவரது செயல்திறனுக்குமசிந்தனைக்கும் எடுத்துக்காட்டு

மலையக மக்களுக்கும் இந்நாட்டில் வாழும் தமிழ் மக்களுக்கும் இன்னும் எத்தனையோ பிரச்னைகள் இருக்கின்றன. இவற்றுக்குச் சுமுகமான நிரந்தரமான தீர்வுகாண்பதில் திரு. தொண்டமான் ஆற்ற வேண்டிய பணி இன்னும் பலவுள. அவர் இதை அமைதியாக நிறைவேற்றுவார் என்று எதிர்பார்ப்போம்.

### மணிவாக்கு

பேராசையையும், பொறாமையையும், பணத்தை அபரிமிதமாகச் சேர்த்தலையும் விட்டு ஒழி.
—சுவாமி சிவானந்த சரஸ்வதி.

# பண்பாடு பற்றிப் பேசுமுன்

## குறைகளையும் சிந்திப்போமா?

தமிழினத்தின் விடுதலை பற்றியும் தமிழர் ஒற்றுமை பற்றியும், சமய நம்பிக்கை அவசியம் குறித்தும் மிக பலமாகப் பேசப்பட்டு வரும் தமிழினத்தின் பெரும் நெருக்கடியான இச்சூழ்நிலையில் யாழ்ப்பாணத்தில் சமயப் பற்றுக்கு சவால்விடும்வகையில் 'படித்து உணர்ந்த' பெரும் இடங்களிலேயே நடைபெற்று வரும் மிகவும் மனவருத்தத்திற்குரிய தரக்குறைவான செயல்கள் சில குறித்து சுட்டிக்காட்டவேண்டியது தமிழன் என்ற வகையில் என் கடமையாகிறது.

### பிரபல்யம் பெற்ற கல்லூரிகள்

சைவமக்களால் பெரிதும் பக்தி சிரத்தையுடன் கொண்டாடப்பட்ட சரஸ்வதி பூஜையின்போது தமிழன் பெருமை விளம்பும் யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள பிரபல்யமான, தனிப்பட்ட ஒரு ஆண்கள் கல்லூரியும், ஒரு பெண்கள் கல்லூரியும், ஒரு மண்டபமும் நடந்து கொண்டமுறை தமிழர் அனைவரும் வெட்கித் தலைகுனியவேண்டியதாகும்.

பிரஸ்தாப ஆண்கள் கல்லூரி சரஸ்வதி பூஜை கொண்டாடினால் தமது சமயத்துக்கு இழுக்கு என்று கருதியதோ என்னவோ சரஸ்வதி பூஜைக்கு அனுமதி மறுத்துவிட்டது. அங்கு கல்வி பயிலும் சைவ மாணவர்கள் யாழ்ப்பாணத்தில் பணம் கொடுத்து சைவம் நடத்தவேண்டிய மண்டபத்தில் சரஸ்வதிபூஜை கொண்டாடவேண்டியதிலை ஏற்பட்டது.

### ஆசிரியருக்குக் கடிதம்

இங்குள்ள மற்றொரு பெண்கள் கல்லூரியும் இப்பூஜை நடத்த அனுமதி மறுத்ததால் அங்கு பயிலும் மாணவிகள் மூன்றுமைல் தொலைவு சென்று சரஸ்வதி பூஜையை நடத்தினர்.

மற்றொரு மண்டபத்தினரும் 'அனுமதி மறுப்பில்' இதே போக்கையே கையாண்டுள்ளனர்.

### கொழும்பு முன்மாதிரி

இதேவேளை, கொழும்பில் உள்ள கத்தோலிக்க மக்கள் நிர்வாகத்திலுள்ள மிலாகிரிய சென் போல்ஸ்மகளிர் கல்லூரியில் சரஸ்வதி பூஜை வெகு விமரிசையாக நடத்தப்பட்டுள்ளது.

கலைத்தெய்வமான சரஸ்வதிக்கு பூஜை செய்வது தமிழர் பண்பாட்டில் வாழையடி வாழையாக வந்துள்ள பெருமிதத்திற்குரிய ஒரு வழக்கமாகும்.

### தனிநாயகம் அடிகளார் கூறியது

வணபிதா தனிநாயகம் அடிகளார்கூட கொழும்பில் நடைபெற்ற வைபவம் ஒன்றில் ஒரு சமயம் பேசுகையில் சரஸ்வதி பூஜை தமிழ் மாணவ, மாணவியர்க்கு உரிய மிகமுக்கிய நிகழ்ச்சியென்றும் தைப்பொங்கல் தமிழ் விவசாயிகள் திருநாள் என்றும் வலியுறுத்திக் கூறியுள்ளார்.

சரஸ்வதி பூஜைக்கு அனுமதி மறுப்பது குறுகிய எண்ணம் கொண்ட ஒரு சாராரின போக்கேயாகும். இவர்கள் மனம் விரிவுபட்டாகவேண்டும் உலக மக்களையெல்லாம் இரட்சிக்க வந்துதித்த இரட்சகரின் நாமத்தை இறைஞ்சி பிரார்த்திக்கையில் குறுகிய மனப்போக்குக்கு இடமளித்தல் பண்பாகுமா?

### தமிழன் என்று மார்தட்டுவதால் சிறப்புண்டா?

சிங்கள பௌத்தர்கள்கூட சரஸ்வதிபூஜை கொண்டாடி அக்கலை தெய்வத்திற்கு வழிபாடு நடத்தியிருக்கையில் நம்மவர் 'நாம் தமிழர்' என்று மார்தட்டுவது மட்டும் சிறந்த முறையாகிவிடுமா என்பதை சிந்தித்துப் பார்க்கவேண்டும்.

### ஆலயங்களில் வியாபார நோக்கமா?

இதேவேளை சனிபகவானுக்கு பக்தர்கள் எள்ளெண்ணெய் சட்டி எரிக்கையில் சைவஆலயங்களில் நடைபெறும் ஒரு பழக்கத்தையும் கண்டிக்க வேண்டியுள்ளது. சனிபகவானின் கடும்பார்வையினின்றும் தம்மை காப்பாற்றிக்கொள்ள மிகுந்தசிரமப்பட்டு புரட்டாதி சனியன்று பக்தாகள் பூஜைக்கு டிக்கட் பெற்று ஆலயங்களுக்குச் சென்றால் அங்கு எள்ளெண்ணெயை முற்றாக எரிவதற்கு ஆலய நிர்வாகஸ்தரால் நியமிக்கப்படுபவர் விடுகிறாரில்லை. எரிந்து முடியுமுன்பே அவர் அதை எடுத்துவிடுகிறார்

யாழ்ப்பாணப் பகுதியில் உள்ள கிறிஸ்தவ தேவாலயம் ஒன்றில் பக்தர்கள் கொளுத்தும் மெழுகுவர்த்திகள் முழுமையாக அல்ல, அல்ல ஒருசிறு பகுதி எரிவதற்கு முன்பாகவே நிர்வாகஸ்தரின் நியமன நபரினால் அணைத்து எடுக்கப்பட்டு விடுகிறது.

### தமிழன் புனிதனாக வேண்டும்

இதனால் ஆலயங்களில் வியாபார நோக்கே மேலோங்கி உள்ளதோ என அஞ்சிக் கவலையடைந்திடத் தோன்றுகிறது.

தமிழர் ஒற்றுமைபற்றிப் பேசுமுன் தமிழன் தன்னை புனிதனாக்கி, இளைஞர்கள் நாத்திகப் போக்கிற்கு சென்றுவிடாது தடுக்கும் வகையில் பெரிய மனதுடன் நடந்து கொள்ள வேண்டும்.

என். கதிர்காமநாதன்
யாழ்ப்பாணம்.

## "இதயம் எனது காணிக்கை"

(யாழ்ப்பாணம்)

பிரபல சிங்கள நடிகரான காமினி பொன்சேகா கதாநாயகனாகவும் தென்னிந்தியத் தமிழ் நடிகை ஒருவர் கதாநாயகியாகவும் நடிக்கும் "இதயம் எனது காணிக்கை" பட ஆரம்பவிழா எதிர்வரும் 28ம் திகதி யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெறவிருக்கிறது.

இப்படத்தை திரு. பாலச்சந்திரன் தயாரிக்கவிருக்கிறார்.

ஷர்மிளா ஆட்ஸ்ஸ்தாபனம் சார்பில் இப்படம்தயாராகும்.

இதேதினம் மாலை 'ஷர்மிளா' நூல் வெளியீட்டுவிழாவும் வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெறும்.

ஈழத்துக் கலைஞர்களைக் கௌரவித்து அவர்களுக்கு வாய்ப்பு வழங்கும்குறிக்கோள் கொண்ட கலை ஸ்தாபனம் 'ஷர்மிளா ஆட்ஸ்' என்று திரு. பாலச்சந்திரன் தெரிவித்தார் [உ]

### கிராமியவங்கி முகாமையாளர்

## விசேட பதவியாக ஆணைக்குழு அங்கீகாரம்

(யாழ்ப்பாணம்)

ப. நோ. கூ. சங்கங்களின் கீழ் மக்கள் வங்கிகளின் உதவியோடு இயங்கிவரும் கிராமிய வங்கிக்கிளை முகாமையாளர் பதவிகளைக் குறிப்பிட்ட சம்பளத் திட்டத்துடன் விசேட பதவியாக கூட்டுறவு வேலையாளர் ஆணைக்குழு அங்கீகரித்து சகல கூட்டுறவுச் சங்கத் தலைவர்களுக்கும் சுற்றுநிருபம் மூலம் அறிவித்துள்ளது.

கூட்டுறவு ஆக்க ஆணையாளர் தற்போது கூட்டுறவு வேலையாளர் ஆணைக்குழுவுக்கும் மக்கள்வங்கிக்குமிடையிலான உடன்படிக்கையின் படியும் விசேட வினைத்திறன், வங்கிக்கிளைப் பாதுகாப்பு ஆகியவைகளை நோக்கி கிராமிய வங்கிக்கிளை முகாமையாளர் பதவிகளை ஒரு விசேட பதவியாகக் குறிப்பிட்ட சம்பளத் திட்டத்துடன் உருவாக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது என தமது சுற்றறிக்கையில் தெரிவித்துள்ளார்

கிராமியவங்கிக் கிளை முகாமையாளர் தரம் I க்கான சம்பளத்திட்டம்:-

300—435

10X6—12 50X6

இப் பதவிக்கான கல்வித் தகமைகள் பின்வருமாறு:-

கூட்டுறவு வேலையாளர் உயர்தர தராதரப் பத்திரமும், கிராமிய வங்கி நடவடிக்கைகளில் நாலு வருடத்திற்கு மேற்பட்ட அனுபவமும் அல்லது, கணக்கியல், பொருளியல் என்பனவற்றுடன் நாலு பாடங்களில் க. பொ. த. உயர்தர பரீட்சையில் சித்தியும் கிராமியவங்கி நடவடிக்கைகளில் 5 வருடத்துக்கு மேர்பட்ட அனுபவமும் அல்லது கிராமிய வங்கிக்கிளை முகாமையாளர் தரம் II பதவியிலான இரண்டுவருட அனுபவமும் தேவை.

கிராமிய வங்கிக்கிளை முகாமையாளர் தரம் II க் கான சம்பளத்திட்டம்:

250—400

10X10—12·50X4

இப்பதவிக்கான கல்வித்தகைமைகள்; கணக்கியலுடன் க. பொ. த. உயர்தரப்பரீட்சையில் மூன்று பாடங்களில் சித்தியும் கிராமியவங்கிநடவடிக்கைகளில் இருவருட அனுபவமும் அல்லது க. பொ. த. சாதாரணதரப் பரீட்சையில் 6 பாடங்களில் சித்தியும் கூட்டுறவு வேலையாளர் சாதாரணதரப் பத்திரமும் கிராமிய வங்கி நடவடிக்கைகளில் இருவருட அனுபவமும் அல்லது கணக்குலிகிதர் தரம் II இலான ஐந்து வருடசேவை அனுபவமும் தேவை. [ஊ]

# எமது நோக்கம் நிறைவேற அயராது பாடுபடுவேன்

## நடேஸ்வரா கலைவிழாவில் வட்டு 'திரு'

[யாழ்ப்பாணம்]

"எம். பி.க்களும், மற்றையோரும் தமிழர் பிரச்னையில் என்ன செய்கிறார்கள் எனக் கேள்விக் கணைகள் தொடுப்பதைவிட்டு ஒவ்வொரு தமிழ் மகனும் தாம் தாம் தமிழீழ இலட்சியத்திற்காக எந்தவகையில் செயற்படுகிறார்கள் என்பதைத் தமது இதயத்தைத் தொட்டுக்கேட்கவேண்டும்".

இவ்வாறு வட்டுக்கோட்டை எம். பி. திரு. ரி. திருநாவுக்கரசு நேற்றிரவு நடைபெற்ற காங்கேசன்துறை நடேஸ்வராக் கல்லூரியின் வருடாந்த பரிசளிப்பு விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டுபேசுகையில்கூறினார்.

அதிபர் திரு. பொன். சோமசுந்தரம் தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில் அவர் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:

"பழையமாணவன் ஒருவன் பாராளுமன்றத்துக்கு சென்றதையிட்டு நடேஸ்வராக்கல்லூரி பெருமிதமடைகிறது. ஆனால் இக்கல்லூரியினால் உருவாகிய நான், நான் தேர்ந்த அரசியல்துறையில் கற்புநெறியில் நிற்பதன் மூலமே என் நன்றிக்கடனை கல்லூரிக்கு செலுத்தி வருகிறேன், என்னை நோக்கத்துக்காக தேர்ந்தெடுக்கப்பட்டேனோ அந்த நோக்கை நிறைவேற்றப் பாடுபடுவேன். வடக்குக் கிழக்குப் பகுதியில் தமிழ்பிராந்தியமாக இருந்த பகுதியில் மூன்றிலொன்று சிங்களக் குடியேற்றத்தால் பறிபோயிற்றென்று பேசுவதில் பயனில்லை தமிழ் இளைஞர்கள் எமது பிரதேசத்தைப் பாதுகாக்கும் வகையில் குடியேற முற்படவேண்டும்.

தமிழ் ஈழ விடுதலைக்காக எம்.பி.க்கள், மற்றையோர் என்ன செய்கிறார்கள் எனக் கேள்விக்கணைகள் தொடுப்பதைவிட்டு ஒவ்வொருவரும் தாம்தாம் எந்த அளவு இந்த இலட்சியத்துக்கு தொழிற்படுகிறோம் என தமது மனதில் சத்திய அடிப்படையில் வினவி விடைகண்டு பணிபுரியவேண்டும்" என்றார்.

### வித்தியாதிபதி பேச்சு

சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்ட வடமாநில கல்விப்பணிப்பாளர் திரு. ரி. மாணிக்கவாசகர் பேசுகையில் "கட்டுப்பாடு, ஒழுக்கம் தாமாக மாணவர்களிடையே பேணப்படுவது. இக்கல்லூரின் நிர்வாகச் சிறப்பைக் காட்டுகிறது தமிழ் சமூக எழுச்சிக்கு கட்டுப்பாட்டுடன் கூடிய மாணவ உலகம் அவசியம்" என்றார் தரமான பல இசை நடனநாடகங்கள் விழாவில் இடம் பெற்றன உருவகத்தியில் ஆடல் பாடலும் விரவிய 'பானையும் சட்டியும்' என்றகலைட்சேர ச ஏ ரி. பொன்னுத்துரையின் தயாரிப்பு சாதிகட்டுப்பாட்டைச் சாடி, கலைமெருகுடன் ரசிகர்களைப்பெரிதும் ஈர்த்தது [உ]

## உரும்பராயில் கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

குற்றத்தடுப்புத் தொடர்பாக "பொலிசாரும் பொதுமக்களும்" என்ற கருத்தரங்கு ஒன்று எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை மாலை உரும்பராய் சைவ தமிழ் வித்தியாசாலை மண்டபத்தில் நடைபெறவிருக்கின்றது

சுன்னாகம் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி திரு பி சுகுணேந்திரன் சிறப்புச் சொற்பொழிவு நிகழ்த்துவார். [உ]

"மின்சாரத்தில் தன்னிறைவு:

# அண்டை மாநிலங்களை நம்பும் நிலை இருக்கக் கூடாது

## கோவையில் எம். ஜி. ஆர். வலியுறுத்து

சென்னை, அக். 18

தமிழகத்தின் மிகப் பெரும் மின்சாரத் திட்டத்தை நேற்று திறந்து வைத்த முதல் அமைச்சர் திரு. எம். ஜி. இராமச்சந்திரன், "தமிழகத்தின் மின்சார தன்னிறைவுக்கு நாம் மாநிலத்திற்குள்ளேயே செயற்படவேண்டும். அண்டைமாநிலங்களை இவ்விடயத்திற்கு நம்பியிருக்கக்கூடாது" என்று வலியுறுத்தினார்.

75 கோடி ரூபா செலவில் குந்தா நீர் மின்சாரத்திட்டத்தைமுதலமைச்சர் கோயம்புத்தூரில் இருந்து 80 கிலோ மீட்டர் தொலைவில் உள்ள பில்லூரில் ஆரம்பித்துவைத்தார்.

கடல்நீரையும், அணுசக்தியையும் மற்றும் ஆதாரங்களையும் பயன்படுத்தி மின்சாரத்திட்டத்தை செவ்வனே நிறைவேற்றவேண்டும்என்றும் முதலமைச்சர் கேட்டுக் கொண்டார்.

### கிராம வளர்ச்சி

கிராமரீதியான அபிவிருத்தித் திட்டத்திற்கு தமிழக அரசு 20 கோடி ரூபாவை ஒதுக்கியுள்ளது என்று கூறிய திரு. எம் ஜி. ஆர். படித்த வாலிபர்கள் கிராமப்புற வளர்ச்சியில் தமது கவனத்தைச் செலுத்தி கிராமப்புற மக்கள் நகர்ப்புறங்களுக்கு வந்து சிரமமுறும் நிலையை நீக்கவேண்டுமென வேண்டுகோள் விடுத்தார். மின்சார ஊழியர்கள் விடுத்த கோரிக்கைகளையும் முதலமைச்சர் ஏற்றுக்கொண்டார். (உ)

## பாரத-சீன நட்புறவு

புதுடில்லி, அக். 18

பாரத-சீன நட்புறவு தொடர்பான விடயத்தில் மூன்ருவது நாடுகள் எதுவும் சம்பந்தப்படும் என்ற பேச்சுக்கே இடமில்லை என்று பாரத வெளி நாட்டமைச்சர் திரு. வாஜ் பாய் தெரிவித்துள்ளார். (உ)

## லெபனுன் பிரஜைகள் லிபியாவுக்குள் புக தடை

லண்டன், அக். 18

லெபனுன் பிரஜைகள் லிபியாவுக்குள் நுழைவதற்கு லிபிய அரசு தடைவிதித்துள்ளது

பெய்ரூட்டில் நடைபெற்று வரும் கலவரங்களினுல் லெபனுன் பிரஜைகள் ஏனைய நாடுகளில் குடியேறுவதில் முற்பட்டுள்ளனர்.

இதைத் தம் நாட்டுக்குள் தடுப்பதற்கு முன்னெச்சரிக்கையாகவே லிபியா இந் நடவடிக்கையை எடுத்துள்ளது. (உ)

# தமிழகத்தில் ஒரு நாள்

## வேலைநிறுத்தம், கடையடைப்பு

### எதிர்க்கட்சிகள் அக். 23-ல் நடத்த முடிவு

சென்னை, அக் 18

மாணவர்கள், தொழிலாளர்கள், விவசாயிகள் ஆகியோரின் ஜனநாயக உரிமைகளை உறுதிப்படுத்தும்வகையில் இம் மாதம் 23ம் திகதி தமிழகத்தில் ஒருநாள் வேலைநிறுத்தம், கடையடைப்புச் செய்வதென தமிழக எதிர்க்கட்சிகள் நேற்று சென்னையில கூடி முடிவுசெய்தன.

### கல்யாணசுந்தரம் கருத்து

"இந் நடவடிக்கை தமிழக அரசுக்கு எதிரானதல்ல. மாணவர், தொழிலாளர், விவசாயிகள் ஆகியோரின் உரிமைகளைக் காப்பதற்காகவே எடுக்கப்படுகிறது" என்று இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ்நாடு பிரிவுத் தலைவர் திரு. எம். கல்யாண சுந்தரம் நேற்று சென்னையில் நிருபர்களிடம் தெரிவித்தார்.

இதேவேளை, அம்பத்தூரில் கடந்த திங்கட்கிழமை நடைபெற்ற மோதல் தொடர்பாக நீதிவிசாரணை நடத்த வேண்டும் என்று மார்க்ஸிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர் திரு. ஏ. பாலசுப்பிரமணியம் தமிழக அரசைக் கேட்டுக்கொண்டுள்ளார்.

கைதான தொழிற்சங்கத் தலைவர்களை விடுதலைசெய்யுமாறும் அவர்களுடன் பேச்சுவார்த்தை நடத்துமாறும் அவர் வலியுறுத்தியிருக்கிருர்.

### அம்பத்தூரில் நடந்தது

அம்பத்தூரில் இரு சைக்கிள் தொழிற்சாலை ஊழியர்களுக்கு இடையே நடைபெற்ற மோதலில் 10 பொலிசார் உட்பட 20 பேர் காயமடைந்திருந்தனர். 100 பேர் கைதாகினர்.

பொலிசார் துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர்; எனினும் எவருக்கும் அபாயம் நேரவில்லை. (உ)

# நியூட்ரன் குண்டு

## ரஷ்ய விஞ்ஞானி அச்சம்!

மாஸ்கோ, அக். 18

"நியூட்ரன் குண்டு தயாரிப்பில் இறங்கும்படி நிர்வாகத்தை அமெரிக்க சட்டசபை நிர்ப்பந்திப்பது, அணு ஆயுதப்போட்டியை மீண்டும் தூண்டிவிடும்" என்று பிரபல சோவியத் விஞ்ஞானி பேராசிரியர் விளாதிமிர் துருஹானேவ்ஸ்கி எச்சரித்தார்.

"அமெரிக்கசெனட்டர்கள், பல கோடி டாலர்களை வீணன முயற்சியில் வீண் விரயம் செய்யப்போவதில்லை ராட்சத ராணுவ தொழிற்றுறை கம்பனிகள் லாபம்திரட்ட எத்தனிக்கிறது" என்று அவர் தெரிவித்துள்ளார். அவர் மேலும் கூறுவதாவது:

"ஹரல்ட் பிரவ்னுடைய இலாகா, நியூட்ரன் குண்டு உற்பத்தி ஐரோப்பாவில் உள்ள அமெரிக்க அணுஆயுதங்களை நவீனமயமாக்க எடுக்கப்படும் நடவடிக்கையென்று கூறியபோதிலும், இது ஒரு ஆபத்தான நடவடிக்கையாக இருக்கும். எனென்ருல் இது அணுவாயுததுறையில் "ஆபத்தான கட்டம்" என்று கூறப்படும் நிலைக்கு ஐரோப்பிய மக்களையும் பிறமக்களையும் தள்ளிவிடும்.

மேற்கத்தைய பத்திரிகைகளே, நியூட்ரன் குண்டு, அணுஆயுத போர் சுவாலையை கிளறிவிடும் நிக்குச்சி என்று எச்சரித்திருக்கின்றன. நியூட்ரன் குண்டு உற்பத்திக்கு சாதகமாக வாக்களித்துள்ள 68 செனட்டர்கள் இது அமெரிக்க பந்தோபஸ்தை பலப்படுத்தும் என்று இதய சுத்தியுடன நம்பக்கூடும் அமெரிக்காவும் சோவியத் யூனியனும் அணுவாயுதத் துறையில் சமபலம் பெற்றுள்ளன. இது அவர்களால் சகிக்கமுடியாத விஷயமாக இருக்கலாம். ஏற்கனவே அமெரிக்காவிடம் 30,000 அணுவாயுதங்கள் உள்ளன. இநத நிலையில் நியூட்ரன் குண்டு, பிரவேசம் செய்தால் ஆயுதபல சமநிலை குலைந்துவிடும். இதன் விளைவாக மற்ற தரப்பு சமநிலையை மீண்டும் ஸ்தாபிக்க முனையும் போது அணுவாயுதபோட்டி ஏற்படப் போகிறது. நியூட்ரன் குண்டு முன்னர் கண்டறியாத படுநாசங்களை ஏற்படுத்தக்கூடிய பயங்கர குண்டு. நியூட்ரன் குண்டு உற்பத்தியை எந்தக் காரணங்களைக் காட்டியும் நியாயப்படுத்த முடியாது" என்று பேராசிரியர் துருஹானேவ்ஸ்கி கூறினுர்.

## சிக்மகளூர் இடைத்தேர்தல்:

# 26 சுயேச்சையாளர்கள் உட்பட 28 பேர் போட்டி

புதுடில்லி, அக். 18

கர்நாடக மாநிலத்திலுள்ள சிக்மகளூர் தொகுதியில் இதுவரை இல்லாத அளவுக்கு அதிகரித்த வேட்பாளர்கள் போட்டியிடுகின்றனர்.

அடுத்த மாதம் 5ம் திகதி நடைபெறவிருக்கும் இந்த இடைத்தேர்தலில் போட்டியிடுபவர்களில் 26பேர் சுயேச்சை வேட்பாளர்களாவர்.

மற்றிருவர் திருமதி இந்திரா காந்தியும், ஜனதாகட்சிவேட்பாளர் திரு. வீரேந்திரபட்டீலுமாவர்.

கடந்ததேர்தலில்இத்தொகுதியில் காங்கிரஸ், ஜனதா நேரடிமோதலில் ஈடுபட்டு காங்கிரஸ் பெரும்வெற்றியீட்டியிருந்தது.

இம் முறைத் தேர்தலின் போது பார்வையாளர்களும் நியமிக்கப்படுவரென்று தேர்தல் கமிஷன் அறிவித்துள்ளது. (உ)



**நாகம்ஸ்**
(சுன்னுகம்)
தினசரி 2-45, 6-45, 10-00
முத்துராமன்-ஸ்ரீவித்யா
காலங்களில் அவள்
வசந்தம்

**வெஸ்லி**
(மானிப்பாய்)
தினசரி 6-30, 9-30
முத்துராமன்-ஜெய்சித்திரா
இன்ஸ்பெக்டர்மனைவி

**Rio** (Jaffna)
Phone: 7607
Daily 4 Shows
CAPTAIN
APACHI


பாரதிநினைவுதின

## பேச்சுப்போட்டி

[தெல்லிப்பழை]

கட்டுவன் மத்தி விஸ்வநாதப்புலவர் சனசமூக நிலையத்தினரால் நடாத்தப்பட்ட பாரதி நினைவுதினப்பேச்சுப் போட்டியில் பின்வருவோர் பரிசில்கள் பெற்றுள்ளனர் பண்டிதர் திரு நடராசா தலைமையில் இப்பேச்சுப் போட்டி நடைபெற்றது.

கீழ்ப்பிரிவு: செல்விகள் நா. சாந்தினி, அ. சாந்தினி, க. கமலினி.

மத்தியபிரிவு: செல்விகள் அ. விழுதினி ப. தயாநந்தினி செல்வன் சி. சிவகுமார்

அதிமேற்பிரிவு: சிவா நித்தியானந்தன், சி. சிவஞானம், த- சண்முகநாதன். (சு)

# ராஜாஜிநூற்றுண்டுவிழாசபை ரூ.1 கோடி நிதிதிரட்டதிட்டம்

## எம். ஜி. ஆரிடம் தமிழகம் பொறுப்பு

சென்னை, அக். 18

மூதறிஞர் ராஜாஜி நூற்றுண்டு விழாக் கமிட்டி ஒரு கோடி ரூபா நிதிதிரட்டும் திட்டம் ஒன்றினை வகுத்துள்ளது.

ராஜாஜி நூற்றுண்டு விழாவையொட்டி சென்னையில் நேற்று புதியசபை ஒன்று தெரிவானது. இச்சபைக்கு பாரதஜனாதிபதி திரு. என். சஞ்சீவரெட்டி தலைவராகவும், ஜெயப்பிரகாஷ் நாராயண் உபதலைவராகவும் தெரிவாகினர்.

தமிழ்நாடு மாநிலத்திற்கு முதலமைச்சர் திரு எம். ஜி. இராமச்சந்திரன் தலைமையில் கமிட்டி நியமிக்கப்பட்டது.

### திருமதி விஜயலட்சுமி பண்டிட் உட்பட...

மேற்படி திட்டத்திற்குத் தாராளமாக நிதியுதவுமாறு ஜெயப்பிரகாஷ் நாராயண், ஆச்சாரியா கிருபளானி, திருமதி விஜயலக்ஷ்மிபண்டிட், திரு. சி. சுப்பிரமணியம் முதலானோர் கையெழுத்திட்டு வேண்டுகோள் ஒன்றினை வெளியிட்டுள்ளனர்.

உத்தேச ராஜாஜி நூலகத்தை சென்னையிலுள்ள தக்கர்பாபா வித்தியாலயத்தில் அமைப்பதெனவும் தீர்மானிக்கப்பட்டது. (உ)

## "பிரிட்டன்போர் விமானங்கள்: பாரத வாங்குவதன் நோக்கம் அமெரிக்காவுக்கு புரியவில்லையே"

### ஜெகஜீவன்ராம் கவலை

புதுடில்லி, அக். 18

"தற்போதுள்ள பழைய விமானங்களுக்குப் பதிலாகவே நாம் புதிய போர் விமானங்களை பிரிட்டனிடமிருந்து வாங்கவுள்ளோம். அமெரிக்கா பாரதத்தின்இந்நோக்கத்தைப் புரிந்துகொள்ள வில்லையே".

இவ்வாறு பாரதபாதுகாப்பு அமைச்சர் திரு. ஜெகஜீவன்ராம் கவலை தெரிவித்தார்.

புதுடில்லியில் நடைபெற்ற இராணுவ உயரதிகாரிகள் மாநாடு ஒன்றில் பேசுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

பாரதம் பிரிட்டனிடம் இருந்து போர்விமானங்கள் வாங்குவதற்கு அமெரிக்கா எதிர்ப்புத் தெரிவித்துள்ளது குறித்தே திரு. ஜெகஜீவன்ராம் இவ்வாறு குறிப்பிட்டார்.

ரஷ்யாவின் உதவியும் இது விடயத்தில் நாடப்படுமென்றும் அவர் தெரிவித்தார்.

இதன் பொருட்டு ரஷ்ய பிரதிநிதிகள் குழு ஒன்று பாரதம் வருமென்றும்அவர்சொன்னார்.

பாதுகாப்புச் செலவினங்களைப் பாரதம் குறைத்தேவருகிறதென்றும் அவர் கூறினார். (உ)

## இன்றைய இராசிப்பலன்

புரட்டாதி மாதம் 2-ந் திகதி
வியாழக்கிழமை
(19-10-78)

**மேடம்:-** பிரயாணத்தில் பொருள் நழுவக்கூடும், தனிவழிப் பயணத்தைத் தவிர்க்கவும், அதிக சிந்தனையில் ஈடுபடுவீர்கள், கொடுக்கல் வாங்கல் மூலம் பண நெருக்கடி ஏற்பட முடியும்.

**இடபம்:-** இனபந்துக்கள் மத்தியில் பூசல்கள் தோன்றும், மனக் குமைச்சல்களினால் வேதனைப் படுவீர்கள், சிறிய விஷயத்திற்கும் இடமுண்டு, தெய்வநம்பிக்கை வேண்டும்.

**மிதுனம்:-** முன்னாள் ஆசிரியர் ஒருவர் உமது முன்னேற்றத்திற்கு வழி காட்டுவார், அடக்கமான நடவடிக்கையின் மூலம் மற்றவர்களின் மனதைக் கவருவீர்கள். இறை நம்பிக்கை மேலோங்கும்.

**கடகம்:-** எதிர்பார்த்த வேதனம் இன்னும் இடையில் தடைப்படும், சிலர் குறை கேட்க நேரிடும், கடன் தொல்லையும் அதிகரிக்கலாம், பிணிக்கு இடங்கொடாது நடக்கவும்.

**சிங்கம்:-** வாகனம் செலுத்துவோருக்கு நன்மதிப்புக் கிடைக்கும், கல்வித்துறையில் புதிய உற்சாகம் பிறக்கும், அறிஞர்களின் ஆதரவும் உண்டு, சுபதினம்.

**கன்னி:-** வசதிகள் பெருகும், வாழ்க்கையும் வளமாகும், தொழில்துறையில் புதிய வெற்றிகள் கிடைக்கும், சுபநாள்.

**துலாம்:-** அதிகாரக் குறைவுக்கிடமுண்டு, அபாயகரமான தொழிலில் ஈடுபடுவோர் கவனம் செலுத்தவும், அவசர நடவடிக்கையைத் தவிர்த்துக் கொள்ளவும்.

**விருச்சிகம்:-** களஸ்திர வழியால் நன்மைகள் கிடைக்கும். குடும்பத்திலும் மகிழ்ச்சிக்கிடமுண்டு, காதல் வானில் சஞ்சரிப்பவர்களுக்கு கனிவான நிகழ்ச்சிகள் உண்டு.

**தனுசு:-** எண்ணிய காரியத்தில் ஏமாற்றம் தென்படும், கூட்டு வியாபாரத்தில் மோசடி நடக்கலாம், நன்முகச் சிந்தித்த பின்பு செயலாற்றுக.

**மகரம்:-** பெரியோர் ஆதரவு கிடைக்கும், தெய்வத்தின் அருளும் உண்டு, இலட்சியப்பாதையில் முன்னேற்றம் காணப்படும்.

**கும்பம்:-** வித்தையில் வெற்றி காணும், வேண்டியது கிடைக்கும், பொதுமக்கள் தொடர்புடன் புகழ் வந்து சேரும்.

**மீனம்:-** மெத்தவும் பொருள் சேரும், மேலிடத்து ஆதரவு தப்பாமல் கிடைக்கும், தித்திக்கும் செய்தியுடன் தேனான வாழ்வும் உண்டு.

**சோதிடக்கலாநிதி**

**திருமலை . க. வேலுப்பிள்ளை**

## வலைப்பந்தாட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் வை. எம். சி. ஏ. வலைப்பந்தாட்டக் கோஷ்டிக்கும் யாழ் பரியோவான் கல்லூரி கோஷ்டிக்கும் இடையே நடைபெற்ற சிநேகபூர்வமான வலைப்பந்தாட்டப்போட்டியில் யாழ் வை எம், சி. ஏ. வெற்றியீட்டியது. வை. எம். சி. ஏ. 106 புள்ளிகளும் பரியோவான் கல்லூரி 103 புள்ளிகளும் பெற்றன

வை. எம். சி. ஏ கோஷ்டியைச் சேர்ந்த சித்தி ரஞ்சன் தனபாலசிங்கம் ஆகியோர் திறமையாக ஆடினர். (கூ-இ)

## "வெற்றி தோல்விகளை சமமாக ஏற்கவேண்டும்"

(யாழ். விளையாட்டு நிருபர்)

இளைஞர்கள் எல்லோரும் விளையாட்டுத்துறையில் கூடிய கவனம் செலுத்தி நாட்டின் முன்னேற்றத்திற்கு வேண்டிய உதவிகளைச் செய்யவேண்டும்'

இணுவில் இந்து விளையாட்டுக் கழகத்தின் 14-வது ஆண்டுவிழா நிகழ்ச்சியின் போது பிரதம விருந்தினர்களில் ஒருவராகக் கலந்துகொண்ட மானிப்பாய் எம். பி. பேரவை உறுப்பினர் திரு. வி. தர்மலிங்கம் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் பேசுகையில் கூறியதாவது:

விளையாட்டின் மூலம் ஒரு மனிதன் முழுமை அடைகிறான். பண்பையும், ஒழுக்கத்தையும் வெற்றிதோல்விகளை சமமாக ஏற்றுக்கொள்ளும் தன்மையும் அடைகிறான். இதனால் வாழ்க்கையில் ஏற்படும் தோல்விகளைச் சகித்து முன்னேற்றமான பாதையில் அடி எடுத்து வைப்பதற்கு விளையாட்டுப் போட்டிகளில் பங்கு கொள்ளவேண்டும். சுன்னாகம் பொலிஸ் இன்ஸ்பெக்டர் திரு. பொ. சுகுணேந்திரன், யாழ். அமைச்சூர் விளையாட்டுக்கழகத் தலைவர், திரு. வி. ரி. சிவலிங்கம் ஆகியோரும் பிரதம விருந்தினர்களாகக் கலந்துகொண்டார்கள்.

வெற்றிபெற்ற கழகங்களுக்கு திருமதி சிவலிங்கம் பரிசில்களை வழங்கினார். [க]

## வளாகத்தில் இன்று

(யாழ்ப்பாணம்)

இலங்கைப் பல்கலைக் கழக யாழ். வளாக மாணவர்கள் ஐவரின் சிறு கதைகளின் தொகுப்பான "மாலை" இன்று மாலை வளாக இராமநாதன் மண்டபத்தில் வளாகத் தலைவர் பேராசிரியர் சு. வித்தியானந்தனால் வெளியிட்டு வைக்கபடுகிறது.

மேற்படி சிறுகதைத் தொகுப்பை யாழ். வளாக 'தமிழ் மன்றம்' வெளியிட்டு வைக்கிறது.

பேராசிரியர் கா. கைலாசபதி, விரிவுரையாளர்கள் நா. சுப்பிரமணியம், மு. நித்தியானந்தன், பட்டதாரி மாணவன் இ சிவலிங்கராஜா, ஆகியோர் "மாலை" சிறுகதைத் தொகுப்பை விமர்சிப்பர். (இ)


**REGAL** Daily 4-30, 7-00, & 9-30 P. m. Phone: 360
(Jaffna)
Flying Ship And The
Nights of Circus
(color)
அற்புத ஸர்க்கஸ் காட்சிகள் நிறைந்தது
அனைவரும் பார்க்க வேண்டிய படம்.

**வெலிங்டன்** (யாழ். நகர்)
தினசரி 3 காட்சிகள்
சனி, ஞாயிறு 4 காட்சிகள்
ஆலயமணி
(புதியபிரதி)

**லிடோ** (யாழ். நகர்) போன்: 7698 தினசரி 4 காட்சிகள்
நினைவில் நின்றவள்

**ஸ்ரீதர்** (யாழ்ப்பாணம்) தினசரி 10-15, 2-15, 6-15 & 9-45
சிவாஜி ... சாவித்திரி ... பாலையா
சந்திரபாபு ... தங்கவேலு நடித்த
காத்தவராயன் (புத்தம்புதியபிரதி)

**ராணி** (யாழ். நகர்) தினசரி 4 காட்சிகள் கடைசி வாரம
சிவாஜி-மஞ்சுளா
நடித்த
உத்தமன்
(சினிட்மன் கலர்)

**மனோகரா** (யாழ்ப்பாணம்) தினசரி 4 காட்சிகள்
எம். ஜி. ஆர்., அஞ்சலிதேவி
நடித்த
மர்மயோகி (புதிய பிரதி)

**வின்ஸர்** (யாழ்ப்பாணம்) போன்: 466 தினசரி 4 காட்சிகள்
ஜெமினி - தேவிகா
நடித்த
வாழ்க்கைப்படகு
(புதிய பிரதி)

**சாந்தி** (யாழ்ப்பாணம்) போன்: 7642.
தினசரி 10-30, 2-30, 6-30, 9-45
சிவாஜி - தேவிகா - நாகேஷ்
கே. பாலச்சந்தரின்
நீலவானம் —புதிய பிரதி—

**ராஜா** (யாழ். நகர்) தினசரி: 10-30, 2-30, 6-30, 9-45
ஃ மரிக்கார் ராமதாஸ்
ஃ ஹெலன்குமாரி
செல்வசேகரன்-சிவராம் - ஜவாகர்-ராஜகோபால்
மற்றும்பலர் நடித்த சிறந்த ஹாஸ்ய திரைவிருந்து!
ஏமாளிகள்

# ஆலயப்பிரவேச வழக்கில் சமரசம் ஏற்படுத்தித் தீர்ப்பு!

(யாழ்ப்பாணம்)

கரணவாய் தெற்கு முதலைக்குளி முருகமூர்த்தி முருகன் கோவிலுக்குள் சிறுபான்மை சமூகத்தாரைச் செல்லவிடாது தடைசெய்ததாகக் குற்றம் சாட்டித் தொடரப்பட்ட வழக்கில் பருத்தித்துறை நீதவான் திரு கே. ஞானசந்திரன் ஒரு சமரச, முடிவை ஏற்படுத்தித் தீர்ப்பளித்தார்.

இவ்வழக்கில் 75-ம் ஆண்டு மே மாதம் 10ம் தேதி கரணவாய் தெற்கு முதலைக்குளி முருகமூர்த்தி முருகன் கோவிலுக்குள் சிறுபான்மைச் சமூகத்தாரைச் செல்லவிடாது தடைசெய்ததாக க. தியாகராசா குருக்கள், ஈ. விநாயகமூர்த்தி, வே. மாணிக்கவாசகர், வே. தில்லையம்பலம், ஆ சின்னையா, க. ஆறுமுகம் ஆகியோர்மீது சமூக ஏற்றத்தாழ்வு ஒழிப்பு சட்டத்தின் கீழ் வழக்கு தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

எதிரிகள் சார்பில் சட்டத்தரணி ஏ பரமகுரு, சட்டத்தரணி சிவா பாலேந்திரா ஆகியோர் ஆஜரானார்கள்.

வழக்காளி சார்பில் சட்டத்தரணி வி. கதிரவேலுப்பிள்ளை, சட்டத்தரணிவேலும்மயிலும், சட்டத்தரணி கனக மனோகரன் ஆகியோர் ஆஜரானார்கள்.

நீதவான் ஞானச்சந்திரனும், சட்டத்தரணிகளும் கோவிலுக்கு நேரில் சென்று பார்வையிட்டார்கள்.

கோவில் முன்பகுதியில் போடப்பட்டிருந்த கிராதியை அகற்றும்படியும் 10 அடி உள்ளுக்கு புதிய கிராதியொன்றை வழக்காளி தரப்பினரின் செலவில் போடவேண்டுமென்றும், நீதவான் ஒரு சமரச ஏற்பாட்டைச்செய்து கட்டளையிட்டார்.

பூஷகரும் உறவினர்களும், அவர்களைச் சார்ந்தவர்களும் தீட்சை பெற்ற நிர்வாக பொறுப்பானவர்களும், மட்டுமே சாதாரண உற்சவகாலங்களில் அக்கிராதிக்கு உள்ளே செல்லாமென்றும இவர்களைத்தவிரவேறு எந்தச் சமூகத்தினரும், கிராதிக்கு உள்ளே சென்றால் வழக்காளிகளான சிறுபான்மைத் தமிழரும், இந்து மதத்தவர்கள் யாவரும் கிராதிக்கு உள்ளே செல்ல உருத்துடையவர்கள் என்றும் நீதவான் தீர்ப்பளித்தார். (க)

இரவு திருவிழா பார்க்க

## காரில் சென்ற இளைஞர் பிணமாகக் கிடந்தார்

(புலோலி)

பருத்தித்துறை, வல்லிபுரக் கோவில் தேர்த்திருவிழாவை யடுத்து, இரவு நடைபெறும் நிகழ்ச்சிகளைப் பார்ப்பதற்காக நண்பர்களுடன் காரில் சென்ற இளைஞர் ஒருவர், வல்லிபுரக்கோவிலை அடுத்துள்ள கவடுகிராய்க்குளத்திற்கண்மையில் பிணமாகக் கிடக்கக் கண்டுபிடிக்கப்பட்டுள்ளார்.

துன்னாலையைச் சேர்ந்த தங்கவேலாயுதம் என்ற 28 வயதான இளைஞரின் சடலமே மேற்கண்டவாறு கண்டுபிடிக்கப்பட்டதாகும்.

இச்சம்பவம் தொடர்பாக, கார்ச் சாரதியான செல்வராசாவையும், இறந்தவரின் நண்பர்களான அருந்தவம், சூரியகுமார் ஆகியோரையும் சந்தேகத்தின்பேரில் தேடிப் பருத்தித்துறைப் பொலிஸார் வலை வீசியுள்ளனர்.

இவர்கள் பிரயாணஞ்செய்த காரின் உரிமையாளர் ஆனந்தசிவம் என்பவரின் நலன்கருதி அவரையும், காரையும் சட்டத்தரணிகளான சிவா பாலேந்திரா, சதா. இராமநாதன், எஸ். இராஜகுலேந்திரா ஆகியோர் பருத்தித்துறை நீதிபதி திரு. கே. ஞானச்சந்திரன் முன்னிலையில் ஆஜர்செய்தபோது, கார் உரிமையாளரிடமிருந்து வாக்குமூலங்களைப் பெற்ற நீதிபதி, மீண்டும் தேவையேற்படும் போது அறிவித்தல் கொடுக்கப்பட்டால் நீதிமன்றத்தில் ஆஜராகவேண்டுமெனக் கூறி, சம்பந்தப்பட்ட காரை பொலிஸ் பாதுகாப்பில் வைக்கும்படியும், பிரேத பரிசோதனையை மேற்கொள்ளுமாறும் கட்டளையிட்டு, மேல்விசாரணையை ஒத்திவைத்தார்.

## யாழ்.மாநகர ப. நோ. கூ. சங்கத்துக்கு புதிய தலைவர்

[நாயன்மார்கட்டு]

யாழ்ப்பாண மாநகர பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் புதிய தலைவராக சட்டத்தரணி திரு. ஏ. எம். ஆலாலசுந்தரம் நியமிக்கப்பட்டுள்ளார்.

திருவாளர்கள் என். ரி. செல்லத்துரை, தம்பு கந்தையா, எஸ். பூபாலசிங்கம், என். அன்ரனிப்பிள்ளை, டாக்டர் பரராஜசிங்கம், எஸ். பரநிருபசிங்கம் ஆகியோர் அரசாங்கத்தாலும் திருவாளர்கள் எஸ். பொன்னுத்துரை, எம். சி. ராலூப், எம். யோகநாதன், பி. ஜே. அன்ரனி, என். தேவபாலசுந்தரம் ஆகியோர் கிளைகளின் சார்பாக பாவனையாளர்களாலும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். திரு. ரி. சுப்பிரமணியம் ஊழியர்களின் சார்பில் தெரிவுசெய்யப்பட்டார்.

முன்னைநாள் தலைவர் திரு. சி. குமாரசாமி, நவரத்தினம் ஆகியோர் ராஜினாமாச் செய்துள்ளனர்.

கொலை சந்தேக நபர்:

## தொடர்ந்து றிமாண்ட்

[பண்டத்தரிப்பு]

கொக்குவில் துப்பாக்கிச்சூட்டு கொலை சம்பவம்தொடர்பாக சந்தேகத்தின்பேரில் கைதுசெய்யப்பட்டு றிமாண்டில் வைக்கப்பட்டிருந்த பண்டத்தரிப்பைச் சேர்ந்த கார்ச்சாரதி எஸ். பத்திநாதன் என்பவரை மீண்டும் யாழ்ப்பாண நீதிமன்ற நீதிபதி முன்னிலையில் ஆஜர்செய்தபோது, மீண்டும் அவரை இம்மாதம் 24ம் திகதிவரை தொடர்ந்து றிமாண்டில் வைக்குமாறு நீதிபதி உத்தரவிட்டார்.

இவர் நீண்டகாலமாக விளக்கமறியலில் வைக்கப்பட்டிருப்பதாகவும் இவரை விடுதலைசெய்யுமாறும் சந்தேக நபர் சார்பில் ஆஜரான சட்டத்தரணி திரு எஸ். நாகராஜா நீதிபதியிடம் கோரிக்கை விடுத்தபோதிலும் பொலிஸ்தரப்பில் இதற்கு ஆட்சேபம் தெரிவிக்கப்பட்டதால் நீதிபதி தொடர்ந்து இம்மாதம் 24ம் திகதிவரை அவரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார்.

## திடீர் பரிசோதனை

]வேலணை]

நிறை குறைந்த பாணைத் தயாரிக்கும் பேக்கரிகள்மீது திடீர்ப்பரிசோதனை நடாத்தி நிறை குறைந்த பாணைத் தயாரிப்போர்மீது ஊர்காவற்றுறைப் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி திரு. எஸ். எம். ஐயாத்துரை தீவிர நடவடிக்கைகளை எடுத்துவருகின்றார். [இ]

## புற்றுநோய் அட்டை யாருடையது?

அரசாங்க புற்றுநோய் ஸ்தாபனத்தால் வழங்கப்பட்ட சிகிச்சை அட்டையொன்றை முனியப்பர் கோயில் அருகில் கண்டெடுத்த ஆனைக்கோட்டையைச் சேர்ந்த நவரட்ணசிங்கம் என்பவர் ''ஈழநாடு'' காரியாலயத்தில் ஒப்படைத்துள்ளார். உரியவர் பெற்றுக் கொள்ளலாம்.

வெளிநாடுகளிலிருந்துவரும்

## அன்பளிப்புகளை இலகுவாக பெற்றுக்கொள்ள வசதி

### சுங்க கலக்டர் ஆலோசனை

[கொழும்பு]

சுங்கவரி திணைக்களம் ஏற்றுமதி, இறக்குமதித் தீர்வையின்மூலம் ஒருநாளைக்கு இரண்டு கோடி ரூபாய் வருமானம் பெறுகின்றது.

இத்தகவலை நேற்று சுங்கப் பிரதம கலெக்டர் செய்திநிருபர்கள் மகாநாட்டில் கூறினார்.

வருடம் ஒன்றுக்கு ஏற்றுமதிவரிமூலம் 400 கோடி ரூபாயும், இறக்குமதி மூலம் 170 கோடி ரூபாயும் வருமானமாகப் பெறமுடியும் என்று எதிர் பார்க்கப்படுவதாகவும் கடந்த செப்டம்பர் மாதம் வரை சென்ற வருடம் 327 கோடியே 90 லட்சம் ரூபாய் ஏற்றுமதித்தீர்வைமூலம்கிடைத்தது என்றும் அவர் சொன்னார்.

விரைவில் உள்நாட்டில் மதிப்பீட்டுச் சபை ஒன்று நிறுவப்படவிருப்பதாகவும் இது சர்வதேச நாடுகள் சபையின் ஆலோசனையின்பேரில் நிறுவப்படவிருப்பதாகவும் அவர்தெரிவித்தார். மேலும் இதற்கான சர்வதேச நாணய சபை நிபுணர் ஒருவர் இங்கு வரவிருப்பதாகவும் அவர் எட்டுமாத காலம் இங்கு தங்கியிருப்பார் என்றும் பிரதம சங்க கலெக்டர் தெரிவித்தார்,

வெளிநாடுகளிலிருந்து வரும் அன்பளிப்புகளை சிரமமின்றி இலகுவாகப் பெற்றுக்கொள்ளும் வகையில் நடவடிக்கை எடுக்கப்படவிருப்பதாக அவர் தெரிவித்தார். (ம)

## வெளிநாடு செல்ல இந்திராவுக்கு அனுமதி

புதுடில்லி. அக். 17

இந்திய முன்னாள் பிரதமர் திருமதி இந்திராகாந்திக்கு டில்லி நீதிமன்றம் சுமார் ஒன்றரை வருடங்களுக்குப் பின்னர் வெளிநாடு செல்ல அனுமதி வழங்கியுள்ளது

கடந்த ஆண்டு திருமதி இந்திராகாந்தி பொதுத்தேர்தலில் தோல்வியுற்ற பின்னர் இதுகாலவரை திருமதி இந்திராகாந்திக்கு வெளிநாடு செல்ல அனுமதி மறுக்கப்பட்டிருந்தது.

ஷா கமிஷன் முன் சாட்சியமளிக்க மறுத்தமைக்காக திருமதி இந்திராமீது தாக்கல் செய்த வழக்கை விசாரித்த நீதிமன்றமே நேற்று அவருக்கு வெளிநாடு செல்ல அனுமதித்தது.

நீதிமன்ற அனுமதிக்கிணங்க திருமதி காந்தி நவம்பர் மாதம் 10ம் திகதி முதல் 20ம் திகதி வரை பிரிட்டனில் நடைபெறும் ஜவஹர்லால்நேரு பிறந்ததின விழாவில் கலந்து கொள்வார். ]இ]

## பீலிக்ஸ்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கோழிப்பண்ணையை ஒரு கம்பனியாகப் பதிவுசெய்தாரென்றும் அரச வழக்காற்றுத் துறைப் பிரதி அதிபர் திரு. சுனில் டி சில்வா ஆணைக்குழு முன் எடுத்துக் கூறினார்.

## இந்தியா 291: 3

ராவல்பிண்டி, அக். 18

இந்தியாவுக்கும், பாகிஸ்தானுக்குமிடையிலான முதலாவது டெஸ்ட் கிரிக்கெட் போட்டியின் 3வது நாளான நேற்று, இந்தியா தனது முதலாவது இன்னிங்ஸில் ஆட்ட நேர முடிவில் 3 விக்கெட் நஷ்டத்திற்கு 291 ஓட்டங்கள் எடுத்திருந்தது. பாகிஸ்தான் ஏற்கனவே 8 விக்கெட் நஷ்டத்திற்கு 503 ஓட்டங்களை எடுத்து ஆட்டத்தை நிறுத்திக்கொண்டது.

## கடித...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

அத்தச் சத்தத்தைக் கேட்டு மகிழவேண்டுமெனத் திரு. ஆர். ஜி. சேனநாயக்கா கூட்டங்களில் பேசியிருக்கிறாரா என்பது தெரியாதென்றார் சாட்சி, திருகோணமலையில் அவர் போட்டியிட்டவர் தமிழ்மக்களின் ஆதரவு அவருக்குத் தேவைப்பட்டது அப்படியிருக்க இவ்வாறு பேசியிருப்பாரென்று நான் நினைக்கவில்லையென்றார். காலஞ்சென்ற எஸ். ஜே. வி. செல்வநாயகத்தின் அஸ்தி, திருகோணமலைக்குக் கொண்டுவரப்பட்டதையடுத்து வன்செயல்கள் ஏற்பட்டதாகவும் அவர் சொன்னார். (ம)

## இன்று தாக்கல்

(கொழும்பு)

பாராளுமன்றம், இன்று பிற்பகல் கூடுகின்றது.

பல்கலைக்கழகச் சட்ட மூலம் இன்று சபையில் சமர்ப்பிக்கப்படும்.

அரசாங்கப் பாராளுமன்றக் குழுக் கூட்டமும், தமிழர் விடுதலைக் கூட்டணிக் குழுக் கூட்டமும் இன்றுகாலை நடைபெறவிருக்கின்றன.

தமிழர் விடுதலைக் கூட்டணி எம். பி.க்கள், இன்று திட்டமிடல் அமைச்சின் செயலாளர் டாக்டர் விக்கிரமசூரியாவை சந்தித்து, வடக்கு கிழக்கு மாகாண அபிவிருத்தித் திட்டங்கள் பற்றி ஆலோசிக்கவிருக்கின்றனர். (ம)

## காங்கிரஸ்...

[1ம் பக்கத் தொடர்ச்சி]

திரு. அமிர்தலிங்கம் தம்பதிகள் இம்மாதம் 15ம் திகதி கனடாவுக்கு 5 நாள் பயணம் மேற்கொண்டு அங்குபோய்ச் சேர்ந்தனர். அவர்களை டொரண்டோ விமானநிலையத்தில் அதிகாரிகளும் அங்குள்ள தமிழர் நிறுவனப் பிரதிநிதிகளும் வரவேற்றனர்.

திரு. அமிர்தலிங்கம் தம்பதிகள் 19ம திகதி மீண்டும் அமெரிக்கா திரும்பி 21ம் திகதிவாக்கில் லண்டனுக்கு வருவர். பின் அங்கிருந்து இந்தியாவுக்கு வருவர். (ம)

## வடபகுதி இ. போ. ச. பற்றி ஆராயக் குழு

[கொழும்பு]

வட பகுதி இ போ. ச.பற்றி ஆராய்வதற்காக ஜனாதிபதி குழுவொன்றை நியமித்திருக்கின்றார்.

வடபகுதி இ. போ. ச. தனிப்பட்ட முறையில் சுயேச்சையாகச் செயல்படுவதாகவும், அரசியல் செல்வாக்கிருப்பதாகவும் முன்னர் அமைச்சர் ஒருவர் குற்றஞ்சாட்டியதையடுத்து இக்குழு நியமிக்கப்பட்டிருப்பதாகத் தெரிகிறது. (ம)

கிழக்குமாகாணத்துக்கு

## வருட முடிவுக்குள் 20 பஸ்கள் வரும்

[திருகோணமலை]

கிழக்குமாகாணத்தின் பஸ், ரயில சேவைகள் குறித்துஆராயும் பொருட்டுதிருகோணமலை கச்சேரியில் போக்குவரத்து அமைச்சர் ஜனாப் எம். எச். மொஹமத் நடத்திய மாநாட்டில் இவ்வருட முடிவுக்குள் 20 புதிய பஸ்கள் கிழக்கு மாகாணத்திற்கு அனுப்பி வைக்கப்படுமென்று தெரிவிக்கப்பட்டது

போக்குவரத்துச்சேவை டன்முகப் படுத்தப்பட்டதன் பின் கிழக்கு மாகாணத்திற்கு 42 பஸ்கள் அனுப்பப்பட்டன என்று கூறிய அமைச்சர் 1979ம் ஆண்டு ஏப்ரல் மாசத்திற்குள் மேலும் 60 பஸ்கள் கிழக்கு மாகாணத்திற்குஅனுப்பிவைக்கப்படுமென்றும் சொன்னார்.

ஒவ்வொருமாவட்டத்திற்கும் சரிசமமான சேவைகிடைக்கும் என்றும் எல்லா சமூகங்களினதும் ஒத்துழைப்பை அரசு நாடிநிற்கிறதென்றும் அமைச்சர் குறிப்பிட்டார்.

திருகோணமலை-மூதூர் கடல்பாதை குறித்து பிரஸ்தாபித்த அமைச்சர் பல லட்சரூபா செலவில் இரு மோட்டார் படகுகள் இங்கு சேவையில் ஈடுபடுத்தப்படும் என்றும் இதுபற்றி வானொலி சமிக்ஞைக் கருவிகள், உயிர் பாதுகாப்புக்கருவிகள் என்பன இருக்கும் என்றும் அமைச்சர் தெரிவித்தார்-

மூதார் இறங்குதுறை சீரமைக்கப்படவுள்ளது என்ற தகவலையும் அமைச்சா வெளியிட்டார். (உ)

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேற்கு வீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1978-ம் ஆண்டு அக்டோபர் மாதம் 19-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

The Eelanaadu PostBox 10, Telegram Eelanaadu, Telephone 389 Registered a Newspapr in Srilanka